செ.வெ.எண்; 62 **பத்திரிக்கைச்செய்தி** நாள்; 28/11/2017

இந்திய தேர்தல் ஆணையம் பள்ளிகளில் பயிலும் எதிர்கால வாக்காளர்களாகிய 9, 10, 11, 12 -ம் வகுப்பு மாணவ/மாணவியர்களுக்கு தேர்தல் சம்பந்தமாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, மாணவ/மாணவியர்களிடையே பள்ளி, மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான வினாடி வினா போட்டியை நடத்த ஆணையிட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், திருத்தங்கள் மேற்கொள்ளுதல் மற்றும் தேர்தல் சம்பந்தமான நடைமுறைகள் குறித்த கேள்விகள் இதில் இடம்பெறும்.

இதன் தொடர்பாக, நீலகிரி மாவட்டத்தில், 104 அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலிருந்து தேர்வு செய்யப்பட்ட 208 மாணவ/மாணவியர்கள், மாவட்ட அளவிலான போட்டியில் பங்கேற்க உள்ளனர். இப்போட்டி 30.11.2017 அன்று காலை 10 மணியளவில் உதகையில் அரசு மேல்நிலைப் பள்ளி, பிரீக்ஸ் நினைவு மேல்நிலைப் பள்ளி, புனித சூசையப்பர் மேல்நிலைப் பள்ளி மற்றும் பெத்லேகேம் மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது.

இப்போட்டியில் தேர்வு செய்யப்படும் மாணவ/மாணவியர்கள், மாவட்ட அளவில் தேசிய வாக்காளர் தினத்தன்று கௌரவிக்கப்படுவதுடன், சென்னையில் நடைபெற உள்ள மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ள அனுப்பப்படுவர். அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தலா ஒரு பள்ளியிலிருந்து இரு மாணவர்கள் கலந்து கொள்ளும் மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெறும் மாணவ/மாணவியர்கள் புது தில்லியில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டிக்கு அனுப்பப்படுவார்கள். தேசிய அளவிலான போட்டியில் வெற்றிபெறும் மாணவ/மாணவியர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தால் பரிசு வழங்கப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஓம்/- ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப.,
மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும்
மாவட்ட ஆட்சித் தலைவர்,
நீலகிரி மாவட்டம்.

/உ.ந.உ.ப. /

28/11/2017

தனி வட்டாட்சியர் (தேர்தல்)

28/11/17